செ.வெ.எண்: 526 நாள்: 19.09.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு**

**குறும்படப் போட்டியில் கலந்து கொள்வோர் 26.09.2021க்குள் அனுப்பலாம்.**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் 27.09.2021 உலக சுற்றுலா தினத்தையொட்டி குறும்படப் போட்டி மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் சார்பில் 27.09.2021 உலக சுற்றுலா தினத்தையொட்டி குறும்படப் போட்டி தமிழ்/ஆங்கிலத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள வயது வரம்பு இல்லை. குறும்படம் புதுக்கோட்டை மாவட்ட சுற்றுலாத் தலங்களின் சிறப்பம்சங்களை விளக்குவதாக இருக்க வேண்டும். குறும்படம் 5-நிமிடத்திற்குள் மிகாமல் உயர் தரமான வீடியோவில் பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும்.

இப்போட்டியில் கலந்துகொள்வோர் குறும்படத்தினை "e-mail" மூலமாகவோ, "Drive" மூலமாகவோ அல்லது "wetransfer" மூலமாகவோ அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி (tourismpudukkottai@gmail.com).

குறும்படப் பதிவுகள் 26.09.2021 அன்று மாலை 5 மணிக்கு முன் வந்துசேர வேண்டும்.

தேர்வு செய்யப்படுவோருக்கு கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**